**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 25.09.2025

**அசல் வழக்கு எண்.220/2015**

**பி.சா.1 – சோழன், த/பெ.தர்மன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வாக்குமூலம் நீங்கள் தாக்கல் செய்தது என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறீர்கள் என்றால் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இது தவிர வேறு ஏதேனும் தொழில் செய்கிறீர்களா என்றால் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். பணம் கொடுக்கல் வாங்கல் சீட்டு நடத்துவது செய்தீர்களா என்றால் நான் அவ்வாறு செய்யவில்லை. இந்த வழக்கின் பிரதிவாதி உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் பக்கத்து தெருக்காரர். அவர் உங்களுக்கு உறவுக்காரரா என்றால் உறவுக்காரர் இல்லை. அவர் மீது என்ன வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் பாண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவர் உங்களுக்கு உறவுக்காரர் இல்லை தெரிந்தவரும் இல்லை எப்படி 2 லட்ச ரூபாய் பணம் கொடுத்தீர்கள் என்றால் அவர்கள் மளிகை கடை வைத்துள்ளார்கள் ஆகவே தெரியும். அவர் அப்பா வைத்துள்ளார் அல்லது அவர் வைத்துள்ளாரா என்றால் இருவரும் சேர்ந்துதான் கடை நடத்துகிறார்கள். நீங்கள் சொல்லும் காலகட்டத்தில் சேகர் என்பவர் பூக்கடை சத்திரத்தில் வேலை செய்து வந்தார் என்றால் அவருடைய மாமா கடையில் வேலை செய்து வந்தார். நீங்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமிசரி நோட்டு அவர் கைப்பட எழுதிக் கொடுத்தாரா என்றால் அவர் கைப்படத்தான் எழுதிக் கொடுத்தார். மேற்படி ஆவணத்தில் இரண்டு சாட்சிகள் என்று கூறப்பட்டுள்ளது அதில் ஒருவர் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் மற்றொருவர் ஏன் போடவில்லை என்று கேட்டீர்களா என்றால் அவர் அதனை தான் கொடுத்தார். மேற்படி ஆவணம் நீங்கள் வாங்கி கொடுத்து அவர் எழுதினாரா என்றால் இல்லை அவரே தான் வாங்கி எழுதி கொண்டு வந்து கொடுத்தார். பணம் எங்கு வைத்து கொடுத்தீர்கள் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். சாட்சி ஜெயமணி முன்னிலையில் கொடுக்கப்பட்டது. ஜெயமணி உங்கள் வீட்டில் இருந்து சாட்சி கையொப்பம் போட்டாரா

என்றால் எங்கள் வீட்டில் இருந்து தான் கையொப்பம் போட்டு கொடுத்தார். ஜெயமணி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். ஜெயமணி பிரதிவாதிக்கு எப்படி தெரியும் என்றால் அவர் அவருடைய உறவினர் ஆவார். என்ன உறவு என்றால் மாமன் மைத்துனர் உறவு முறை ஆகும். பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக உங்களுக்கும் பிரதிவாதிக்கும் ஏதேனும் சண்டை நடைபெற்றதா என்றால் 2011 ஆம் ஆண்டு சண்டை நடைபெற்றது. எதை மையமாக வைத்து சண்டை நடந்தது என்றால் நான் சீட்டு நடத்தினேன் சீட்டுக் கொடுக்கவில்லை என்று சண்டை நடந்தது. அந்த சீட்டில் சேகர் பங்கு கொண்டாரா என்றால் பங்கு கொண்டிருந்தார். அவர் எத்தனை சீட்டு கட்டி இருந்தார் என்றால் 2 லட்ச ரூபாய்க்கு மூன்று சீட்டும் ரூபாய் 75 ஆயிரத்துக்கு மூன்று சீட்டும் கட்டியிருந்தார் அவர் ஒரு நபரை அவ்வளவு சீட்டு கட்டினாரா என்றால் அவரும் அவருடைய அப்பாவும் கட்டினார்கள். பிரதிவாதி மேற்சொன்ன பணங்களை ஒழுங்காக கட்டினாரா என்றால் பணம் கட்டவே இல்லை. ஆகவே இது குறித்து இரண்டாவது குற்றவியல் நீதிபதி முன்பாக தனிப்பட்ட வகையில் வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் யார் பாதிக்கப்பட்டவர் என்றால் நான்தான் பாதிக்கப்பட்டேன். யார் பேரில் வழக்கு உள்ளது என்றால் சோழன், தருமன் ஆகியோர் பெயரில் வழக்கு உள்ளது. நீங்கள் பணம் வாங்கியதாக சொல்கிறீர்கள் எத்தனை வருடத்தில் திருப்பிக் கொடுப்பதாக சொன்னார்கள் என்றால் அதைப் பற்றி எல்லாம் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லாத நிலையில் நீங்கள் கடந்த 16.09.2015ல் வழக்கறிஞர் வாயிலாக அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் உங்களுக்கு வட்டி ஒழுங்காக கொடுக்கப்பட்டதா என்றால் வட்டி கொடுக்கவில்லை. பிரதிவாதி உங்களிடம் பணம் வாங்கவில்லை 2013 ஆம் ஆண்டு உங்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்து நடத்துகிறீர்கள் என்றால் சரியில்லை. கடன் உறுதி சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal

Additional Subordinate Judge,
Kancheepuram.